www.tamilarangam.net




## தமிழீழ விடுதலைப் புலிகள்

## LIBERATION TIGERS OF THAMIL EALAM

### சமூக விரோதிகளை அழிப்போம்!

அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழீழ மக்களின் பரந்துபட்ட ஆதரவுடன் நாம் செயற்பட்டுவரும் இவ்வேளையில், எம்மக்களிடமே கொள்ளையடித்தும், வழிப்பறி செய்தும், கப்பம்வாங்கியும், இயக்கத்தின் பெயரைச்சொல்லிப் பணம்சேகரித்தும் வரும் சமூக விரோதக் கும்பல்கள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கின்றன. விடுதலைப் போராளிகளை ஒடுக்குமுறை அரசிற்குக் காட்டிக்கொடுப்பவர்போல இச் சமூகவிரோதச் செயல்களைச் செய்யும் சமூக விரோதக் கும்பல்களும் துரோகிகளே.

எந்நேரமும் எம்மக்களைநோக்கி ஆயுதமேந்தியபடி தமிழீழ மண்ணில் வலம்வரும் சிறீலங்கா ஆயுதப்படையினரின் கெடுபிடிகளால் நொந்துபோயிருக்கும் எம்மக்களை, "வெந்த புண்ணிலே வேல்பாய்ச்சுதல்"போல மேலும் நோகவைக்கும் விதத்தில் இச்சமூகவிரோதக் கும்பல்கள் செயற்பட்டு வருகின்றன. ஆக்கிரமிப்பு இராணுவத்தினதும், இச்சமூகவிரோதிகளினதும் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது. இவர்களை அழித்தொழிப்பதற்கு மக்கள் எமக்குப் பக்கபலமாக அமைவர் என்பது திண்ணம்.

சிறீலங்கா நிர்வாகத்திற்கான சகலதேர்தல்களையும் முற்றுமுழுதாக நிராகரித்து, நடைமுறையனுபவங்களினூடாக சரியான போராட்டப்பாதையில், விடுதலைப்போராளி பிரபாகரன் தலைமையில் நாம் தொடர்ந்தும் முன்னேறுவோம்.

வாழ்கதமிழீழம்

அரசியற் குழு
தமிழீழ விடுதலைப் புலிகள்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!**

வெளியீடு. பிரச்சார வெளியீட்டுவாரியம். தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்